# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337.
மின்னஞ்சல் முகவரி :ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை :**திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:03/ந/2024**

**நாள் :19.11.2024**

| | | |
|---|---|---|
| திரு.V. பழனிவேலு,<br>கொறநாடு,<br>மயிலாடுதுறை மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்,<br>மயிலாடுதுறை நகராட்சி,<br>மயிலாடுதுறை மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

மயிலாடுதுறைமாவட்டம், கொறநாடு, எண்.48 திருமஞ்சனவீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு.V. பழனிவேலு, என்பவரின் 30.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.10.2023 அன்று பெறப்பட்டு, முறைமன்ற எண்.03/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, எண்.48 திருமஞ்சனவீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.பழனிவேலு,என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் ஒரு மூத்த குடிமகன், மயிலாடுதுறைநகராட்சிப்பகுதியில் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மயிலாடுதுறை நகராட்சிக்கு வரி செலுத்தி வருகிறேன். மேலும் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதிய சங்கத்தின் மாவட்டப் பொறுப்பிலும் உள்ளேன். மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு சமூக நலத்திட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறேன். இந்து ஆன்மீகவாதியாகவும் இருப்பதால் கோவில் சொத்துக்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்றும், முறைகேடான விற்பனையை தடுக்க நீதிமன்ற உத்தரவுகளின்படி அரசளவில் நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை நகராட்சியில், மயிலாடுதுறை நகரம் வார்டு 4 நகரளவு எண்.704/705, பெரிய கண்ணாரத்தெருவில் கதவிலக்கம் 41, 41 பி யில் கணபதி மெடிக்கல், A1 ideas இரண்டு கட்டிடங்களுக்கு திரு. ஆர்.சிவபுண்ணியம், என்பவர் பெயரில் 14.03.2017ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தது. இதுகுறித்து மயிலாடுதுறை நகராட்சியில் தகவல் கோரப்பட்டதில், நகராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர் அவரது கடித எண்.33 நாள் 04.08.2021ல் தகவல்கள் கொடுத்துள்ளார்.கோரப்பட்ட தகவல் மற்றும் பொது தகவல் அலுவலர் அளித்துள்ள தகவல் விபரம் பின்வருமாறு:-

| கோரப்பட்ட தகவல் | பொது தகவல் அலுவலர் அளித்துள்ள பதில் | குறிப்பு |
|---|---|---|
| பெரிய கன்னாரத்தெருவில் வழக்கறிஞர் திரு. சிவபுண்ணியம் குடியிருக்கும் கதவிலக்கம் எண்.41-ல் 41-பி என்ற பெயரில் கணபதி மெடிக்கல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்திற்கு நகராட்சி அனுமதி வழங்கிய ஆணை எண். தேதி விபரம் தரவும். | கட்டிட அனுமதி உத்தரவு எண்.40/2017 நாள் 14.03.2017 | |
| மேற்படி கட்டிடம் 41பி கட்டிடம் கட்டியுள்ள வணிக கட்டிடத்திற்கு நில உரிமையாளர் அனுமதிக்கடிதம்/ இசைவுக் கடிதம் கொடுத்துள்ள விபரம் தரவும். | நில உரிமம் கிரய சாசனமாக உள்ளது. | தவறான தகவல் கூட்டுப் பட்டாவில் உள்ளது. |
| மேற்படி 41பி கணபதிமெடிக்கல் கட்டிடத்திற்கு நகராட்சி வரி விதிப்பு யார் பெயரில் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் தரவும். | திரு. சிவபுண்ணியம் என்ற பெயரில் உள்ளது. | |
| மேற்படி இடத்தில் A1 ideas என்ற பெயரில் மற்றொரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் இந்த கட்டிடம் தனியாக கட்டப்பட்டுள்ளதால் இக் கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி கட்டிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஆணை எண்.நாள் விபரம் தரவும். | கட்டிட அனுமதி உத்தரவு எண்.40/2017 நாள்.14.03.2017 | |
| மேற்கண்ட இரண்டு கட்டிடங்களுக்கும் கட்டிட அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் தேவைப்படுவதால் விண்ணப்பத்துடன் தாக்கல் செய்த அனைத்து ஆவண நகல்களுக்கும் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன். | மூன்றாம் நபர் தகவல் கோரப்பட்டுள்ளதால் தகவல் அளிக்க இயலாது. | தவறானதாகும். நகராட்சிக்கணக்குகளில் மேற்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்ட இடம் கோவில் பெயராலும் சிவவுண்ணியம் பெயராலும் கூட்டுப்பட்டாவில் இருப்பதால் தகவல் மறுப்பது சட்டத்திற்கு புறம்பானதாகும். |

இப்பொருள் சார்ந்து, கோவில் சொத்துக்களை பாதுகாக்கும் அக்கறை உள்ள நபர்கள் மற்றும் பொது தொண்டர்களை கேட்டறிந்ததில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 34ன் கீழ் அனுமதி பெற்றதாக குறிப்பிடப்பட்ட கிரய ஆவணம் 370/1986 ல் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்தது.

எனவே ஆவண நகலும் பெறப்பட்டது, ச/பி 34 ன் கீழ் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் நகல் தங்கள் அலுவலகத்தில் இல்லை என்று, மயிலாடுதுறை மாவட்டப் பதிவாளர் அவரது கடித எண்.1799/ஆ1/2017 நாள் 03.07.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை இணைஆணையரிடம் விபரம் கோரப்பட்டதில் மயிலாடுதுறை இணை ஆணையர் அவரது கடித எண்.2565/ பி.சி.27.04.2017ல் கொடுத்துள்ள தகவலில் சட்டப்பிரிவு 34 ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு திருக்கோயில் அலுவலகத்தில் இல்லை என்று திருக்கோயில் கண்காணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததில் போலியாக உத்திரவு எண்.குறிப்பிட்டு, மோசடியாக கிரய ஆவணம் பதிவு செய்துள்ளது தெரிய வந்துள்ளது.எனவே போலி ஆவணத்தை ரத்து செய்யக்கோரி 77ஏ ன்படி மயிலாடுதுறை மாவட்டப் பதிவாளருக்கு புகார் கொடுத்ததில், மேற்கண்ட ஆவனத்தை 77ஏ பிரிவுபடி ஏன் ரத்து செய்யக்கூடாது என்று திரு. ஆர்.சிவபுண்ணியம் என்பவருக்கு கடிதம் எண்.4555/ஆ 2022 நாள் 15.02.2023 காரணம் கோரும் குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட புகார் குறித்து சம்பந்தப்பட்ட என்னிடம் எந்தவித விசாரணையும் செய்யாமல் திரு.ஆர்.சிவபுண்ணியம் என்பவர் என்ன பதில் அளித்தார் என்ற விபரமும் எனக்கு தெரிவிக்காமல் ஆவணத்தில் ஆள்மாறாட்டமோ மோசடி ஆவணப்பதிவோ நிகழாத நிலையில் பதிவுச் சட்டம் 77 ஏ கீழான மனுதாரரின் மனுவானது தள்ளுபடி செய்யப்படுவதாக 29.05.2023 மாவட்ட பதிவாளர் தெரிவித்துள்ளார்.அப்படியானால் விசாரணை செய்யாமலேயே எதற்காக Show cause Notice கொடுத்தார் என்பது மாவட்டப் பதிவாளருக்கு மட்டுமே தெரியும்.

மாவட்டப்பதிவாளரின் உத்திரவினை ஆட்சேபித்து பதிவுத்துறை தலைவருக்கு முறையீடு செய்ததில் எந்தவித விசாரணையும் இன்றி ஆவணங்களுடன் கூடிய மேல்முறையீட்டு மனுவினை திரும்ப அனுப்பிவிட்டார். இதன்மீது அரசுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலையில், நகரளவு எண்.704, 705ல் இரண்டு கடைகள் கட்டுவதற்கான அனுமதியினை ரத்து செய்யக்கோரி மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு 13.05.2023ல் புகார் கொடுத்துள்ளேன். அத்துடன் அனைத்து ஆவணங்களும் இணைத்துள்ளேன். ஆனால் நகராட்சி ஆணையர் இதுவரை விசாரணை எதுவும் நடத்தவில்லை.எந்தவித பதிலும் எனக்கு தரவில்லை. எனவேதான் இந்த புகார் கொடுக்கப்படுகிறது,

புகார் மனுவில் குறிப்பிட்ட சங்கதிகளை இந்த புகாரின் ஒரு பாகமாக எடுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். கட்டிட வரைபட ஒப்புதல் வழங்குவதற்கான அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யாமல் ஒப்புதல் வழங்கப்பட்டதற்கான விபரங்கள்.

(1) தகவல் கொடுக்கப்பட்டதில் கூட்டுப்பட்டாவில் (நகராட்சி கணக்குகளில்) உள்ளதை மறைத்து திரு. சிவபுண்ணியம் பெயரில் உரிமையுடையது என்று தவறான தகவல் கொடுத்துள்ளார்.

(2) கட்டிட உரிமம் அனுமதி வழங்கப்பட்டது நகராட்சி பொது தளத்தில் உள்ள ஆவணமாகும். கோவில் சொத்தாகும், எனவே முறைகேடாக கட்டிட அனுமதி வழங்கிவிட்டு அதற்கான ஆவணங்கள் தனி நபர் சார்ந்தது என்று தர மறுப்பது சரியல்ல.

(3) பகுதிப்பரப்பு கிரயம் பெற்ற விபரம் நகராட்சி நில அளவனப்பதிவேட்டில் உள்ளது. 1764 சதுர அடி மட்டுமே கிரயம் பெற்றுள்ள இடத்தில் வீடு உள்ளதா அல்லது கோவில் இடத்தில் வீடு உள்ளதா, வீட்டின் முன்புறம் அனுமதி அளிக்கப்பட்ட 2 கடைகள் இருக்கும் இடம் யாருக்கும் சொந்தம் என்பதற்கு தனிப்பட்டா இல்லாதபோது கட்டிட அனுமதி வழங்கியுள்ளது முறைகேடாகும்.

(4) கோயில் இடமாக இருக்கும்போது கட்டிட உரிமம் சாதாரண கடிதத்தில் இசைவு பெற்றுஅனுமதி வழங்க விதிகளில் இடமில்லை. குத்தகை ஆவணமாக இருக்கவேண்டும். மேலும் கோவில் நிலத்தை பாராதீனம் செய்வதானாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் குத்தகைவிடுவதானாலும் ச/பி 34 ன்கீழ் இந்து சமய அறநிலையத்துறையின் அனுமதிபெறவேண்டும். மேலும் அரசாணை வெளியிட்டு அரசிதழில் பிரசுரம் செய்யவேண்டும். எனது புகாரில் தெரிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட காரணங்களுக்கு மாவட்டப்பதிவாளர், மாவட்ட ஆட்சியர் அரசுத்துறை செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை யாருமே நேரடியாக பதில் அளிக்கவில்லை.

(1) ச/பி 34 ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டதற்கான ஆணை இதுவரை எந்த துறையினாராலும் முன்னிலைப்படுத்தவில்லை.

(2) கோவில் நில விற்பனைக்கான அரசாணை நகல் மற்றும் அரசிதழ் நகல் விபரம் இதுவரை தெரியவில்லை. (துங்கள் வசம் இல்லை என்று மாவட்டப்பதிவாளர் 1799/ஆ.1, 03.07.2017–ல் தெரிவித்துள்ளார். இணை ஆணையர் (இ.ச.அது)2565 நாள் 10.05.2017–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது)

(3) கிரய ஆவணம் பதிவு செய்யவேண்டுமானால் கிரய சொத்தினை விற்பனை செய்ய விற்பனையாளருக்கு உரிமை உள்ளதா என்பதற்கான மூல ஆவணம் இல்லை.

(4) மூல ஆவணம் இன்றி மேற்கண்ட விற்பனை ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சட்ட விரோதமானதாகும். அறக்கட்டளை, தர்மம் ஆகிய நோக்கத்திற்காக தானம் செய்யப்பட்ட சொத்தினை கிரயம் செய்துள்ளது மோசடியானதாகும்.

(5) 1983 ம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டதாக ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த அனுமதி ஆணை ஆவணத்தின் ஒரு பாகமாக இணைக்கவேண்டும். ஆனால் ச/பி 34 ன் கீழ் வழங்கப்பட்ட ஆணை பதிவாளரிடம் இல்லை என்று மாவட்டப் பதிவாளர் எழுத்து மூலமாக தெரிவித்துள்ளார்.

(6) 1983ல் அனுமதி வழங்கப்பட்டு தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிட்ட நிலையில் எதனால் 1986 ம் ஆண்டில் 3 ஆண்டுகள் கழித்து கிரயம் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்பதில் சந்தேகம் உள்ளது.

(7) ஆவணம் 370/1986 பதிவு செய்யப்பட்ட பின்னர் வார்டு எண். திருத்தம் செய்து மற்றொரு திருத்த ஆவணம் பதிவு செய்ய மீண்டும் அனுமதி பெறப்பட்டதா என்ற விபரம் இல்லை.

(8) குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டும் கிரயம் செய்துள்ள நிலையில் முழுப் பரப்பும் திரு. சிவபுண்ணியம்வசம் உள்ளது. கூட்டுப்பட்டாவில் உள்ள இடத்தில் எவ்வாறு இரண்டு கடைகள்கட்டி ரூ.10000–க்கு வாடகைக்கு விட நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டது. எந்த இடம் தனிப்பட்டா எந்த இடம் கோவிலுக்கானது என்று உட்பிரிவு செய்யாதபோது எவ்வாறு கட்டிட அனுமதி வழங்கப்பட்டது என்று தெரியவில்லை.

(9) புல எண்.704 705 ல் பல நபர்கள் பெயரில் போலியாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது குறித்து ஆவணங்கள் அடங்கல் நகல் புகாருடன் அனுப்பப்பட்டும் வட்டாட்சியரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(10) குறிப்பிட்ட ஒரு நபருக்கு மட்டும் கோவில்மனையை எவ்வாறு விற்பனை செய்ய அனுமதிக்கபட்டது என்றும் அதற்கான சிறப்பு காரணம் என்ன என்றும் அதேபோல் மயிலாடுதுறையில் கோவில் இடத்தில் குடியிருப்பவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அனைவருக்கும் கிரயம் செய்ய அனுமதி வழங்கப்படுமா என்பதும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வருவாய்த்துறை முடிவெடுத்து அறிவிக்கவேண்டியுள்ளது.

எனவே மோசடியாக ஆவணம் பதிவு செய்துள்ள விபரம் தெரிவிக்கப்பட்டும், கட்டிட வரைபட ஒப்புதலைரத்து செய்யாமலும் எனது புகாருக்கு அரசு ஆணை எண்.99 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 21.09.2015, அரசு ஆணை எண்.73 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 11.06.2018 மற்றும் அரசுக் கடிதம் 6112/A2-P & AR Dept. Dt.16.03.2018–ன்படி எந்தவித நடவடிக்கையும் பதிலும் நகராட்சி ஆணையர் அனுப்பவில்லை.

மேற்குறிப்பிட்ட அரசாணைகளை மதிக்காமலும், எனது புகார் மனுவின்மீது எந்தவித விசாரணையும் செய்யாமலும் இருந்தமைக்கு நகராட்சி ஆணையர்மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் முறைகேடாக கோவில் பெயரில் கூட்டுப் பட்டாவாக உள்ள இடத்தில் முறையாக ஆவணங்களை பரிசீலிக்காமல் இரண்டு கடைகள் கட்டுவதற்கு அனுமதி அளிதுள்ளதை உடனடியாக ரத்து செய்யவும் உத்திரவிடுமாறு வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

(2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.01.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

(3) மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் தனது 23.07.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்

''மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட, மயிலாடுதுறை நகரம் வார்டு எண்.1, பிளாக் எண்.21, நகரளவு எண்.704 மற்றும் 705—இல் அமைந்துள்ள இடத்தில் திரு. ஆர். சிவபுண்ணியம், த/பெ.ராமபிள்ளை என்பவருக்கு மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாத சுவாமி கோவில் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் அவர்களும் திருவாவடுதுறை ஆதினகர்த்த ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சன்னிதிகள் அவர்களும் 3528 சதுரடி இடத்தினை கிரயம் செய்து கொடுத்ததின் பேரில் திரு. ஆர். சிவபுண்ணியம், த/பெ.ராமபிள்ளை என்பவருக்கு நிலையிலுள்ள கட்டிடத்தின் முன்புறம் வணிக பயன்பாட்டு கட்டிடம் தரைதளம் 58 சதுரமீட்டர் முதல் தளம் 2177 சதுர மீட்டர் அளவில் கட்டிட அனுமதி எண்.40/2017, நாள் 14.03.2017–இல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகரளவு ஆவணங்களின்படி வார்டு எண்.1, பிளாக் எண்.21, நகரளவு எண்.704/2 மற்றும் 705/1--இல் திரு. ஆர்.சிவபுண்ணியம், த/பெ.ராமபிள்ளை என்பவர்களின் பெயரில் கூட்டு பட்டாவாக பதிவாகியுள்ளது.அதன் அடிப்படையில் நகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் சமர்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்".

மேலும் 23.07.2024 நாளிட்ட எனது அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்து கொள்ளும்படி இம்முறை மன்ற நடுவத்தை கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4)மனுதாரரும் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரும்**06.09.2024** அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 23.07.2024 அன்றைய விசாரணையில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

" மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட கோவிலுக்கு சொந்தமான புல எண்கள். 704 மற்றும் 705–ல் இரண்டு கடைகளுக்கு விதி மீறி நகராட்சியால் கட்டடம் கட்ட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. திரு.ஆர்.சிவபுண்ணியம் என்பவர் பெயரில் 14.03.2017–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி கணக்குகளில் மேற்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்ட இடம் கோவில் பெயரிலும் திரு.சிவபுண்ணியம் பெயரிலும் கூட்டுப்பட்டாவில் உள்ளது. புல எண்.704 மற்றும் 705–ல் பல நபர்கள் பெயரில் போலியாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது குறித்து ஆவணங்கள் அடங்கல் நகல்களுடன் புகார்கள் அனுப்பப்பட்டும் எந்தவித நவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என தெரிவித்துள்ளார்.

6) மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் 23.07.2024 அன்றைய விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

" மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட, மயிலாடுதுறை நகரம் சர்வே எண்.1, பிளாக் கண்.21, நகரளவு எண்.704 மற்றும் 705–ல் அமைந்துள்ள இடத்தில் திரு.ஆர்.சிவபுண்ணியம் த/பெ. ராமபிள்ளை என்பவருக்கு மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதசுவாமி கோவில் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் அவர்களும், திருவாவடுதுறை ஆதினகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சன்னிதிகள் அவர்களும் 3528 சதுர அடி இடத்தினை கிரையம் செய்து கொடுத்ததன் பேரில் திரு.ஆர்.சிவபுண்ணியம் த/பெ.ராமபிள்ளை என்பவருக்கு நிலுவையிலுள்ள கட்டிடத்தின் முன்புறம் வணிக பயன்பாடு கட்டிடம் தரைதளம் 58 சதுர மீட்டர் முதல் தளதம் 21.77 சதுர மீட்டர் அளவில் கட்டிட அனுமதி எண்.40/2017, நாள் 14.03.2017–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் நகரளவு ஆவணங்களின்படி வார்டு எண்.1, பிளாக் எண்.21, நகரளவு எண்.704/2, மற்றும் 705/1–ல் திரு.ஆர்.சிவபுண்ணியம்த/பெ.ராமபிள்ளைஎன்பவரின் பெயரில் கூட்டுப்பட்டாவாக பதிவாகியுள்ளது. அதனடிப்படையில் நகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் 23.07.2024 நாளிட்ட எனது அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்ககளயும் மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7) மேற்கண்ட புகார் மனு தொடர்பாக திரு.ஆர்.சிவபுண்ணியம் அவர்களை விசாரணை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவரை 20.08.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி 07.08.2024 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின் மூலம் அழைப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு திரு.சிவபுண்ணியம் அவர்கள் தனது 14.08.2024 நாளிட்ட மின்னஞ்சலில் தனது உடல்நிலையினை பரிசோதிப்பதற்காக வந்து 03.09.2024 முதல் 06.09.2024 வரை சென்னையில் இருப்பதாக கூறி, 06.09.2024க்கு பிறகு விசாரணை தேதி குறித்து உதவுமாறு கோரியுள்ளார். எனவே அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக 06.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு அழைப்பாணை இம்முறைமன்ற நடுவ14.08.2024 நாளிட்ட அழைப்பாணை மூலம் அனுப்பப்பட்டது.

8) திரு.ஆர்.சிவபுண்ணியம் 06.09.2024 அன்றைய விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முன் மனு எண்.33/1983 என்ற நம்பரில் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 34ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை மாயூரநதசுவாமி கோயில் ஆதீனகர்த்தர் நான் விற்பதற்கு அனுமதிக்க வேண்டுமென கேட்டு கமிஷனர் அவர்கள் முறையாக பேப்பரில் விளம்பரம். கொடுத்து. ஆட்சேபனை பெற்று 14.12.1984–ல் சொத்தை விற்கலாம் என உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அதனடிப்படையில் நான் 13.03.1986ல் ஆவண எண்.370/1986ன் படி கிரய சாசனம் மூலம் மாயூரநாதசுவாமி கோவில் பரம்பரை அறங்காவலரிடம் கிரய பத்திரம் மூலம் பெற்று சொத்தை அனுபவித்து வருகிறேன். முறையாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் கிரய

சாசனம் ஏற்பட்டது.மேலும் நான் 30 வருடங்களுக்கு முன்னரே நகராட்சி அனுமதி பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். அதன்பிறகு 2017–ல் வீட்டிற்கு முன்னதாக உள்ள ஷெட்டை இடித்து விட்டு இரண்டு கடைகளை கட்ட நகராட்சி ஆணையருக்கு மனு அனுப்பி நகராட்சி ஆணையரும் ஆவணங்களை பரிசீலனை செய்து சர்க்காரில் சப்டிவிசன் செய்யும் போது அரசு உத்தரவுபடி கூட்டுப்பட்டா கொடுத்து விட்டதையும் பரிசீலனை செய்து எனக்கு கடை கட்ட அனுமதி கொடுத்தார். நான் வாங்கிய சொத்தின் விபரமும், நான்கு எல்லை விவரமும் அந்த சொத்து எனக்கு முழு சொந்தமானது. வேறு யாருக்கும் உரிமையும், அனுபவமும் கிடையாது. அதனடிப்படையில் இரண்டு கடைகளை கட்டி ஒரு கடையை கணபதி மெடிக்கல் உரிமையாளருக்கு வாடகைக்கு கொடுத்து அவர் அந்தக்கடையை நடத்தி வருகிறார். மற்றொரு கடையை எனது பேரனுக்கு கொடுத்து அவர் தொழில் செய்து வருகிறார். நகராட்சி ஆணையர் என்னுடைய கிரைய பத்திரத்தை பரிசீலனை செய்து சட்டப்படி கட்டிட அனுமதி அளித்துள்ளார். இந்த சூழ்நிலையில் சுமார் 7 வருடங்கள் கழித்து நகராட்சி ஆணையாளர் அனுமதி கொடுக்காதது போலவும், அவர் பட்டாபடி அனுமதி கொடுத்துவிட்டது போலவும் மனுதாரர் கூறியுள்ளார்.என்னுடைய கிரைய சாசனம் மனுதாரரே அந்த கிரைய சாசனத்தை மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகிறது.மனுதாரர் 3வது நபர் என்பதால் முறையாக சில விபரங்களை மனுதாரருக்கு நகராட்சி ஆணையர் கொடுக்கவில்லை என்பது சட்டவிதிகளுக்குட்பட்டதாகும்.

மனுதாரர் எல்லா விபரங்களையும் தெரிந்து கொண்டே அதாவது நான் செக்சன் 34ன் கீழ் அனுமதி பெற்று கிரைய சாசனமும் பெற்றுள்ளேன் என்ற விபரமும் அவருக்கு நன்றாக தெரியும். அதற்குரிய சாசன நகலையும் புகார்தாரர் வாங்கியுள்ளார். அந்த சாசனத்திலேயே ஆணையர் பிறப்பித்த உத்தரவின் நகல் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மோசடி என்பதே கிடையாது. ஆனால் மனுதாரர் அடிக்கடி மோசடி பத்திரம் என கூறிவருகிறார்.

மனுதாரர் ஏற்கனவே மயிலாடுதுறை மாவட்ட பதிவாளர் முன் 13.03.1986ந்தேதி ஏற்பட்ட சாசனம் மோசடி எனக்கூறி அதை ரத்து செய்ய வேண்டுமென மனு கொடுத்து அதற்கு நான் ஆட்சேபனை செய்துள்ளேன் என்றும் அது ஆள்மாறாட்டமோ போர்ஜரியோ செய்யப்பட்டு ஏற்பட்டதல்ல என்றும் 77(a) என்ற சட்டப்பிரிவானது அமலுக்கு வந்த தேதியிலிருந்து தான் பொருந்தும். (Prospective Operation.) இது பல ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தை ரத்து செய்வதற்கு பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்படவும் இல்லை.

Fraud and impersonation இருந்தால் மட்டுமே புதிய சட்டப்படி 77A–ன் கீழ் பரிசீலனை செய்யலாம். இந்த விதி (77A), 30 வருடங்களுக்கு முன் ஏற்பட்ட பத்திரங்களுக்கு பொருந்தாது.It is prospective in its operation and not retrospective.

நகராட்சி சட்டத்தின் கீழ் ஒரு அதிகாரி சட்டவிதிகளுக்குட்பட்டு உத்தரவு பிறப்பித்துள்ள வழக்கில் 3வது நபரான மனுதாரருக்கு அதைப்பற்றி கேட்பதற்கு உரிமை கிடையாது. மேலும் நகராட்சி ஆணையர் உத்தரவில் குறைபாடு என்றால் அதனை மேலதிகாரிகள் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் நிவர்த்தி செய்வதற்கு உரிமை உண்டு. ஆனால் சம்மந்தமே இல்லாத 3வது நபர் நகராட்சி ஆணையாளர், எனக்கு கொடுத்த இக்கட்டிட அனுமதி செல்லாது என்று கூறுவதற்கே உரிமையில்லை.Public interest litigation போடுவதற்கு உச்ச நீதிமன்றத்தினையும், உயர்நீதிமன்றத்தையும் தான் நாடவேண்டும். சிவில் கோர்ட்டிலோ அல்லது tribunal–லிலோ வழக்கு தொடருவதற்கு உரிமையில்லை .

மனுதாரருக்கு என் மேல் தனிப்பட்ட விரோதம் ஏற்பட்டுள்ளது. அதற்குரிய காரணங்களை எனது 06.09.2024 நாளிட்ட மனுவில் தெரிவித்திருக்கிறேன். மேலும் 06.09.2024 நாளிட்ட எனது பதில் மனுவில் கூறப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு மனுதாரரின் புகாரினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் நான் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், 2–வது எதிர்மனுதாரரது வாக்குமூலம் மற்றும் அவரது கவுண்ட்டர்(counter) ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட கோவிலுக்கு சொந்தமான புல எண்கள்.704 மற்றும் 705–ல் இரண்டு கடைகளுக்கு விதி மீறி நகராட்சியால் கட்டடம் கட்ட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. திரு.ஆர்.சிவபுண்ணியம் என்பவர் பெயரில் 14.03.2017–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி கணக்குகளில் மேற்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்ட இடம் கோவில் பெயரிலும் திரு.ஆர்.சிவபுண்ணியம் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது. புல எண். 704 மற்றும் 705–ல் பல நபர்கள் போலியாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது குறித்து ஆவணங்கள் அடங்கல் நகல்களுடன் புகார் அனுப்பப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதசுவாமி கோவில் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் அவர்களும், திருவாவடுதுறை ஆதினகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சன்னிதிகள் அவர்களும் 3528 சதுர அடி இடத்தினை கிரையம் செய்து கொடுத்ததன் பேரில் திரு.ஆர்.சிவபுண்ணியம் த/பெ. ராமபிள்ளை என்பவருக்கு நிலுவையிலுள்ள கட்டிடத்தின் முன்புறம் வணிக பயன்பாடு கட்டிடம் தரைதளம் 58 சதுர மீட்டர்முதல் தளம் 21.77 சதுர மீட்டர் அளவில் கட்டிட அனுமதி எண்.40/2017, நாள்.14.03.2017–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் நகரளவு ஆவணங்களின்படி வார்டு எண்.1, பிளாக் எண்.21, நகரளவு எண்.704/2, மற்றும் 705/1–ல் திரு.ஆர்.சிவபுண்ணியம் த/பெ.ராமபிள்ளை என்பவரின் பெயரில் கூட்டுப்பட்டாவாக பதிவாகியுள்ளது. அதனடிப்படையில் நகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

திரு.சிவபுண்ணியம் அவர்கள் தனது வாக்குமூலத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முன் மனு எண்.33/1983 என்ற நம்பரில் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 34ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை மாயூரநாதசுவாமி கோயில் ஆதீனகர்த்தர் நான் விற்பதற்கு அனுமதிக்க வேண்டுமென கேட்டு கமிஷனர் அவர்கள் முறையாக பேப்பரில் விளம்பரம் கொடுத்து ஆட்சேபனை பெற்று 14.12.1984–ல் சொத்தை விற்கலாம் என உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அதனடிப்படையில் நான் 13.03.1986ல் ஆவண எண்.370/1986ன் படி கிரய சாசனம்மூலம் மாயூரநாதசுவாமி கோவில் பரம்பரை அறங்காவலரிடம் கிரய பத்திரம் மூலம் பெற்று சொத்தை அனுபவித்து வருகிறேன். முறையாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் கிரய சாசனம் ஏற்பட்டது.மேலும் நான் 30 வருடங்களுக்கு முன்னரே நகராட்சி அனுமதி பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். அதன்பிறகு 2017–ல் வீட்டிற்கு முன்னதாக உள்ள ஷெட்டை இடித்து விட்டு இரண்டு கடைகளை கட்ட நகராட்சி ஆணையருக்கு மனு அனுப்பி நகராட்சி ஆணையரும் ஆவணங்களை பரிசீலனை செய்து சர்க்காரில் சப்டிவிசன் செய்யும் போது அரசு உத்தரவுபடி கூட்டுப்பட்டா கொடுத்து

விட்டதையும் பரிசீலனை செய்து எனக்கு கடை கட்ட அனுமதி கொடுத்தார். நான் வாங்கிய சொத்தின் விபரமும், நான்கு எல்லை விவரமும் அந்த சொத்து எனக்கு முழு சொந்தமானது. வேறு யாருக்கும் உரிமையும், அனுபவமும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு.ஆர்.சிவபுண்ணியம் கிரைய ஆவணங்களையும் தனது பெயரில் உள்ள கூட்டுப்பட்டாவினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். இந்து சமய அறநிலையத்துறை சட்டம், 1959, சட்டப்பிரிவு 34ன் கீழ் பெற்ற அனுமதி குறித்து எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் கிரைய ஆவணத்தின் உண்மைத்தன்மை குறித்து ஐயப்பாடு உள்ளதாகவும் கூட்டு பட்டாவில் உள்ள இடம் யாருக்கு சொந்தம் என்று அறியாத நிலையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவமானது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மேல் எழுப்பப்படும் புகார்களை விசாரிக்கும் அமைப்பு ஆகும். இம்மன்றம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற சட்டம்,2014–ல் வகுக்கப்பட்டுள்ள வரம்புகள் மற்றும் வரையறைகளுக்குள் இயங்கி வருகிறது. எனவே கிரைய ஆவணத்தின் உண்மைத்தன்மை மற்றும் சட்டப்பிரிவு 34–ன் கீழ் வழங்கப்பட்ட அனுமதி குறித்து பதிவுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறையினை மனுதாரர் அணுகி உரிய பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார். இந்நேர்வில், தமிழ்நாடுஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்,2019 பகுதி–II, பிரிவு 11-ல் கட்டிட அனுமதிக்கான வரம்புகள் குறித்து கீழ்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" 11. Limitations of Permission:-

The permission granted by the competent authority shall not mean responsibility or clearance of the following aspects,-

(a) Title or ownership of the site or building."

x x x x x x x x x

எனவே, உரிய அமைப்பினால் வழங்கப்படும் அனுமதி கட்டிடம் அல்லது இடத்திற்கான உரிமையினை நிலைநாட்டாது என்பது இதன்மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், திரு.ஆர்.சிவபுண்ணியம் பெயரில் உள்ள கிரைய ஆவணம் மற்றும் கூட்டுப்பட்டாவின் அடிப்படையில் கட்டிட அனுமதி எண்.40/2017 நாள்.14.03.2017 வழங்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது. கூட்டுப்பட்டாவில் உள்ள இடத்திற்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், வருவாய்துறையுடன் கலந்தாலோசித்து மேற்கண்ட இடத்தினை அளவீடு செய்து கிரைய ஆவணத்தின்படி திரு.ஆர்.சிவபுண்ணியத்திற்கு உரிய இடத்தில்தான் கட்டிடம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு நவம்பர் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.V. பழனிவேலு,
எண்.48, திருமஞ்சனவீதி,
கொறநாடு, மயிலாடுதுறை – 609 001
மயிலாடுதுறை மாவட்டம்,

2) ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம்.

3) நகராட்சிகளின் இயக்குநர்,
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 0 28

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)